# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



கவர்னர் மாளிகையில் பிரதமர் இந்திரா காந்தியை அமரர் டாக்டர் அண்ணாவின் மனைவி ராணி அம்மாள் சந்தித்து பொம்மை ஒன்றை வழங்கினார்.

28-5-72

விலை: 25 காசு

## சிறுகதை!

# "தெருப்பாடகன்"

( நிலவழகன் )

சோழ மண்டலம் — கங்கைக் கொண்ட சோழபுரம் களிப்புக் கடலில் திளைத்திருந்தது. தானைத் தலைவர்கள் — மறவர்கள் வீர பெரு விளையாட்டுக்களில் கலந்துக்கொண்டு தங்கள் தோள் வலிமையும்; வாள் வலிமையும் காட்டி மகிழ்கிறார்கள். மறவர் குல பெண்கள் கோலாட்டம்-கொட்டி கொட்டி மகிழ்கிறார்கள். சிறுவர் சிறுமியர்கள் நாங்கள் மட்டும் சோடைப் போனவர்களா என்ன? என்று "சூள்" கொட்டி தங்களுக்கே உரிய விளையாட்டுக்களில் தொடைத் தட்டி—தோள் தட்டி—மார்ற் தட்டி சிலம்பு-கோலாட்டங்களை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

வயோதிகர்கள் தங்கள் தங்கள் சிறார்களின்—பேரப் பிள்ளைகளின் இளம் அரும்புகளின் கேளிக்கைகளை விழியால் பருகி — வயிறு புடைக்க உண்டு—வாய் வலிக்க—வயிறு வலிக்க குலுங்க குலுங்கச் சிரிக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் வாலிப முறுக்குக் கட்டுக் குலையவில்லை என்பதையும் ஆசை யாரை விட்டது; எங்களையும் விட்டது என்பதைக் காட்டுவதுப் போல் அவர்களும் களியாட்டங்களில் கலந்துக் கொள்ளுகிறார்கள்.

அப்பப்பா...மறவர்களுக்குதான் எத்தனை விளையாட்டுக்கள். தெருவெங்கும் மாவிலைத் தோரணம்—மாக்கோலம்! பண்ணூட்டு மன்னர்கள்; காவியம் தீட்டுவோர்; ஓவியம் புனைவோர், பாடல் வல்ல பாணர்கள்; விறலியர்கள்; ஆடற் கலைஞர்கள் அணி அணியாக வருகிறார்கள். காரணம்—

ராஜராஜ சோழன்—படை பல வென்ற ரணகள சூரன் கலைஞர்களுக்கு பரிசு வழங்குகிறார். மன்னன் வழங்கும் அந்தப் பரிசை பெறுவதற்காகத்தான் — அணி அணியாக வருகிறார்கள். அவர்கள் திருமுகங்களிலேதான் எத்தனை மகிழ்ச்சி.

இருக்காதா என்ன? இருக்கத்தானே வேண்டும். தங்கள் அரிய கவிதைக்கு—கலை நுட்பமிக்க ஓவியத்திற்கு — திறமைமிகு ஆடற் கலைக்கு—தேனினு மினிய இசை மழைக்கு — பாராளும் மன்னன் வழங்கும் பரிசாயிற்றே!

அரசனின் முத்தமிழ் மன்றம் களைக்கட்டி விட்டது. மன்றத்தின் இருமருங்கிலும் அரசியல் ஞானிகள்—ஒப்பற்ற அறிஞர்கள் அமர்ந்திருக்கிறார்கள். ராஜராஜ சோழன் உடுகுலங்களின் மத்தியில் சந்திரன் போல் வெண்கொற்றக் குடையின் கீழ் வீற்றிருக்கிறான் அந்த வீரம் செறிந்த திருமுகத்தில் ராசக்களை வீசுகிறது.

தானைத் தலைவன் பரிசுக்குரியோர் பெயர்களை வாய் மொழிகிறார்.

தானைத் தலைவன் சொல்லச் சொல்ல; மன்னர் பிரான் பரிசுகளை அவர்களுக்கு வழங்குகிறார். பரிசுப் பெறும் கலைஞர்கள்—பெற்றுக்கொண்டு மாமன்னரை வணங்கிக்கொண்டு திரும்புகிறார். இடையிடையே மக்கள் தங்கள் மகிழ்ச்சிப் பெருக்கை கையொலி எழுப்பி தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். மன்னருக்கு அதைக் கேட்கவும்; பார்க்கவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதை அவர் முகத்தில் மலரும் புன்னகை எடுத்துக் காட்டுகிறது.

இறுதியாக பாடல் வல்லான் பெயரைக் கூறி அழைக்கிறார் தானைத் தலைவன். அந்தப் பெயரைக் கேட்டு அந்தப் பெயருக்குரியோன் யார் என்று அலையும் அவாவோடு மன்றம் நாலாபக்கமும் பார்க்கிறது.

மக்கள் கூட்டத்தின் மத்தியிலே இருந்து பாடல் வல்லான் எழுந்து நிற்கிறான். இவனா :பாடல் வல்லான்? என்று மன்றம் வியக்கிறது.

எழுந்து நின்ற பாடல் வல்லான் "மன்னர் வழங்கும் பரிசை பெற நான் விரும்பவில்லை" என்றான்.

"ஏன்?" இது மன்னரின் கேள்வி.

"எனக்கேன் ஆரம்பத்திலேயே கொடுக்கவில்லை?" அதைக் கேட்டு மாமன்னர் குழந்தைப்போல் கலகலவென்று சிரிக்கிறார்.

"பாடல் வல்லவனே! ஒவ்வொருவருக்காக கொடுத்துக் கொண்டு வருகிறேன். உம்முடைய பெயர் இப்பொழுதுதான் வருகிறது. உம் பெயர் வரும்போதுதானே உமக்கும் கொடுக்க வேண்டும்? அப்படி இல்லாமல் உமக்கு மட்டும் எப்படி முன்னதாகக் கொடுக்க முடியும்? அப்படிக் கொடுப்பது தவறல்லவா? நீ தேவாலயப் பாடகன் என்பதற்காக உமக்கு முன்னதாகக் கொடுத்துவிட முடியுமா? நீ தேவாலய பாடகன் என்பது எனக்குத் தெரியும் நீதான் சிறந்தப் பாடகன் என்பதையும் நாடறியும். உம் ஆற்றலை சந்தேகிக்கவில்லை என்பதற்காகத்தானே முதற் பரிசும் வழங்குகிறது—நாடு;"

"இருந்தாலும், எனக்கு விருப்பம் இல்லை. அது நீதிக்குப் புறம்பானது; பாரபட்சம் காட்டுகிறீர்கள்? அதனால் அதை பெற விரும்பவில்லை." பாடல் வல்லான் இதை சற்று உரத்தக் குரலில் கூறி அவன் எதிர்ப்பு தெரிவித்தான். அதைக் கேட்டு சிறவேண்டிய மாமன்னர் நெஞ்சம் சிரிக்கத்தான் செய்தது!

"அப்படியா?"

"ஆமாம்......"

"பாடல் வல்லவனே நீயா அப்படிச் சொல்லுகிறாய்?"

"ஆமாம்; நானேத்தான் அப்படிச் சொல்லுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மன்னரின் அடுத்த பதில் என்னவாக இருக்கும் என்பதையும் உணராமல் வில்லிலிருந்துப் புறப்பட்ட அம்பு போல் மன்றத்தைவிட்டு வெளியேறினான்—பாடல் வல்லான்.

மன்னருக்கோ — அவன் சிறுப் பிள்ளைத்தனத்தைக் கண்டு சிரிப்பதா? அனுதாபம் காட்டுவதா? என்றுப் புரியாமல் குழம்பினார்.

அவர் சிந்தனை அலை அலையாக விரிந்தது.

(4-ஆம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13    ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 28—5—72 | இதழ் 46


## பிரதமர் கடமை

தமிழக அரசியல் அரங்கத்துக்குக் கோமாளிகள் இல்லாத குறை குமாரமங்கலம் சீமானும் கொங்கு நாட்டுப் பூமானும் மத்திய அரசின் அமைச்சர்களாகி—அடிக்கடி—தமிழகத்துக்கு வந்து போவதினாலும் பொன் மொழிகளை உதிர்ப்பதினாலும் தீர்ந்து விட்டது.

மதுரையிலே நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் பல்வேறு முழக்கங்களுக்கிடையே சி. சுப்பிரமணியம் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். காலத்துக்கும் அப்படியொரு நகைச் சுவையை அரசியல் உலகில் யாரும் கேட்டிருக்க முடியாது.

'நானும் மோகன் குமாரமங்கலமும், மொழி விவகாரத்தில் தமிழ் நாட்டில் உள்ள மற்ற யாரையும் விட, தமிழர்களின் நலன் காப்பதில் மிகுந்த அக்கறையுடையவர்கள் ஆவோம்' என்று பலத்த கைதட்டலுக்கிடையில் மதுரை மாநாட்டில் சுப்பிரமணியம் முழங்கியிருக்கிறாராம். இதைவிட ஒரு நல்ல நகைச்சுவையை அரசியல் தலைவர்கள் பேசவே முடியாது.

தமிழுக்கும் சுப்பிரமணியத்துக்கும் தொடர்பும் பற்றும் உண்டு. நம்பலாம். மோகன்குமாரமங்கலம் யார்? அவருக்கு என்ன வரலாறு? அவருக்குத் தமிழ் மொயிழின் மேல் பற்றும் தமிழர் நலனில் அக்கறையும் வருவதற்கு என்ன நியாயங்கள் என்பனவற்றைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள்.

வறட்சி நிவாரணத்துக்கு நிதி கேட்டுக்கொண்டிருந்தபோது 'பார்க்குமிடமெல்லாம் பச்சைப்பசேல்' என்றுதானே தெரிகிறது. என்ன வறட்சி! எதற்கு நிதி? என்று கேட்டுத் 'தமிழ் மக்களின்' இதயத்தில் 'நீங்காத இடம்' பெற்றுவிட்டிருக்கும் சுப்பிரமணியம் தமிழர்கள் நலனில் நீங்காத அக்'கறை' கொண்டவர் தான். தமிழ்நாட்டு மக்கள் புத்திசாலிகள்.

ஒரு பேச்சை ஒப்புக்கொள்வதானாலும் கையொலி எழுப்புபவர்; பேசுபவர். வெறும் பிதற்றலாய்ப் பிதற்றினால் 'உட்காரய்யா தெரியும்' என்பதற்குக் கையொலிதான் எழுப்புவார்கள்.

சுப்பிரமணியத்துக்கு எழுப்பப்பட்ட கையொலி அவர் கட்சி மாநாடுதான் என்றாலும்கூட எத்தகைய கையொலி என்பதை எண்ணிப் பார்த்தா சொல்ல வேண்டும்?

* * *

இந்த நகைச்சுவையை அடுத்து அவமானப்படத் தக்க 'அவலம்' என்னவென்றால் 'காமராஜரைப் பற்றிய' இந்திரா காங்கிரஸ் தலைவர்களின் ஏளனமான — மதிக்காத பேச்சு. 'இந்திரா காங்கிரசும் சிண்டிகேட் காங்கிரசும் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை. கதவு திறந்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் தன்னை, ஒரு இந்திரா காங்கிரஸ் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம், தக்க மனமாற்றத்துடன்!' என்று டாக்டர் சங்கர் தயாள் சர்மா பேசியிருக்கிறார். மன்னர் மானியத்துக்கு ஆதரவாக வாக்களித்த காமராஜர்—இந்திரா காந்தியைக் கட்சியை விட்டு 'விரட்டிய' காமராஜர் என்பதாக அவர் நினைவு கூர்கிறார்.

இன்னொருவர் சித்தாந்த சங்கர்—மேற்கு வங்க முதல்வர்—நிச்சயமாகக் காங்கிரசில்—இந்திரா காங்கிரசில் காமராஜர் இருக்கவே முடியாது — அவர் அரசியலில் இருந்து துறவறம் பூணவேண்டும் என்றிருக்கிறார்—பாவம் காமராஜர்! ஒரு காலத்தில் டில்லிப் பட்டணத்துக்குக் "கிங் மேக்கர்!". நிலைமைகளின் மாறுதலுக்குத் தக்கவாறு தன் கருத்துக்களைச் சீரமைத்துக்கொள்ள இயலாததால் வந்த சிந்தனை நோயினால் அரசியல் முடமாகிவிட்டார்!

* * *

'மாநில சுயாட்சிக் கோரிக்கை ஆபத்தானது'— என்று மதுரையில் நடைபெற்ற இந்திரா அம்மையார் கூறியிருக்கிறார். "சிலபேர் 'மாநில சுயாட்சி' என்பது பற்றிப் பேசுகிறார்கள். "Greater automony" என்று கேட்கிறார்கள், அது ஆபத்தானது' என்று அம்மையார் கூறியிருக்கிறார்.

ஆதாரங்களாகச் சிலவற்றைக் — குறிப்பாக — மாநிலங்களுக்கிடையே உறவுமுறை—நாட்டுப் பாதுகாப்பு பற்றியெல்லாம் சொல்லிவிட்டு—சுயாட்சி ஆபத்தானது என்று முடித்திருக்கிறார். நாட்டுப் பாதுகாப்பு என்றால் அது போர்முனையில் படையை நிறுத்துவது மட்டுமில்லை—ஆயுதசாலைகள் அமைத்தல் — பயிர்த்தொழில் — இராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் என்று இவையெல்லாம்கூடப் பாதுகாப்பு என்பதனுள் அடங்கும் என்றெல்லாம் விளக்கியிருக்கிறார். விளக்கி விட்டு இப்படி நாடு முழுதும் பரந்து கிடக்கின்ற 'பாதுகாப்பு' போன்றவற்றை எப்படி மாநிலங்களுக்கே வழங்கிடமுடியும் என்கிற ரீதியில் பேசிவிட்டு 'மாநில சுயாட்சி' ஆபத்தானது' என்று முடித்திருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் தொடக்கத்தில், "மாநில சுயாட்சி கேட்பவர்கள்—Greater autonomyபற்றிப் பேசுகிறவர்கள் — இதுவரை — எது எதை மத்திய அரசு வைத்துக்கொள்வது — எந்தெந்த அதிகாரங்களை மாநில அரசு பெறுவது என்பதுபற்றி 'வரையறை' செய்திடவில்லை" என்று பேசியிருக்கிறார்.

இங்கே அண்ணாவின் திறமை சான்ற பதில் ஒன்று நினைவுக்கு வருகின்றது. 'திராவிட நாடு' கோரிக்கைக்கு வலுமிருந்து வந்த நேரம். திராவிட நாடு திராவிடநாடு என்கிறார்களே அதன் எல்லை என்ன? என்ன அதன் பொருளாதார — சமுதாய திட்டங்கள்? இவைகளை எல்லாம் பற்றி ஒன்றும் சொல்லாமல் திராவிடநாடு — திராவிடநாடு என்கிறீர்களே அதன் எல்லை என்ன? என்ன அதன் பொரு

ளாதார—சமுதாய திட்டங்கள்? இவைகளை எல்லாம் பற்றி ஏன் ஒன்றும் சொல்லாமல் திராவிடநாடு—திராவிடநாடு என்கிறீர்களே' என்று அண்ணாவைக் கேட்டார்கள். அண்ணா அப்போது ஜின்னாவை எடுத்துக் காட்டினார். இப்படித்தான் ஜின்னா பாகிஸ்தான் கேட்டபோது அதனைக் கடுமையாக—ஆவேசத்தோடு எதிர்த்தவர்கள் எல்லாம் பாகிஸ்தானத்துக்கு என்ன எல்லை............நீங்கள் கேட்கும் பாகிஸ்தான் எப்படியிருக்கும்? எல்லை என்ன மொழி என்ன இதர விவரங்கள் என்ன...... எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்றார்கள். உடனே ஜின்னா கேட்டார் : அப்படியானால் நீங்கள் இதுவரை எதனை கடுமையாக எதிர்த்தீர்கள்......? எதனை நினைத்து வேண்டாம்—கூடாது—ஆகாது என்று அலறி வந்தீர்கள் ? என்று!

அந்த ஜின்னாவின் மொழிகளைச் சுட்டிக் காட்டி அண்ணா கேட்டார் : 'அப்படியானால் நீங்கள் எதனை இதுவரை மறுத்து வந்தீர்கள் ?'

நாமும் மாநிலங்களுக்கு என்ன என்ன அதிகாரங்கள்—மத்திய அரசுக்கு என்ன என்ன அதிகாரங்கள் என்று 'வரையறுக்க'வில்லை என்று இந்திரா காந்தி அம்மையார் கூறுகிறார். மெத்தச் சரிதான். அப்படியானால் நீங்கள் 'ஆபத்தானது' என்று நினைக்கிறீர்களே எதனை நினைத்து? கோரிக்கை இன்னதென்று தெரிவதற்கு முன்னாலே என் அதனை மறுக்க முயல்கிறீர்கள்!

உட்கார்ந்து பேச ஒப்புதல் தெரிவியுங்கள் முதலில்! மாநிலங்களுக்கு எந்தெந்த அதிகாரங்களைக் கூடுதலாகத் தரலாம் என்பதுபற்றி விவாதிக்கலாம். அறிஞர்தம் ஆய்வுரைகளைத் திரட்டிக் கொள்ளலாம். அரசியல் இலாபம் தேடுவதை நோக்கமாகக் கொள்ளாத—உண்மைப் பெரியோர் — மூதறிவாளர்தம் சிந்தனைகளை இது தொடர்பாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்—வேறு பல நாடுகளின் முன்மாதிரிகளைப் பார்த்துச் சிந்தித்து முடிவுக்கு வரலாம்.

தேவைக்கு மேற்பட்ட அதிகாரங்கள் டில்லியில் குவிந்து கிடப்பது பற்றியும் — அதிலே புதைந்து கிடக்கிற ஆபத்துக்கள் பற்றியும் நாட்டின் நல்லறிவாளர்கள் ஏராளமாகச் சொல்லிவிட்டார்கள். தேவையற்ற அதிகாரங்கள்—நினைத்தாலும் ஆணை செலுத்த முடியாத அளவு நிலபுலன்கள் பெற்றிருந்த பழைய மகாராஜாக்கள் — ஜமீன்களைப்போல — மத்திய அரசு தன்னிடம் பல அதிகாரங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. இதுபற்றி ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு காணவேண்டும் என்பதுதான் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சிக் கொள்கைக்கான அடிப்படை சிந்தனை.

'மாநில சுயாட்சி' என்ற இரண்டு சொற்களைக் கண்டு மிரண்டு 'ஆபத்து' 'ஆபத்து' என்று அலறுவதைவிட—அது என்ன என்றே தெரியாதபோது அதனை மறுத்து முட்டாள் தனத்தை வெளிக்காட்டுவதைவிட—அது என்ன என்பதை அறிய உரியவர்களிடம் பேசிப் பார்க்கவேண்டியதுதான் பொறுப்பு மிக்க ஒரு நாட்டின் பிரதமர் செய்ய வேண்டிய கடமை !

—புலவர் கோ. அண்ணாமலை.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றொரு நாள் இரவு நகர் சோதனைக்குப் புறப்பட்டார். இரண்டாம் சாமம். வாடைக் காற்று. கடும் குளிர் — உடலை வதைக்கிறது. தெருவோரத் திண்ணையில் ஓர் உருவம் படுத்துக் கொண்டு குளிரில் "உம்...உம்..." என்று நடுங்கிக் கொண்டிருக்கிறது. வீதியில் நடந்து கொண்டிருக்கும் மாமன்னரின் கண்ணில் தென்படுகிறது. வாடைக் காற்றுக் குளிரில் உடலை போர்த்திக் கொள்ளுவதற்கு ஆடையின்றி—கையைக்கொண்டு மெய்யை பொத்திக்கொண்டு இருப்பதைக் காணச் சகியாதவராய் மனமிளகி தன் மேலாடையை-விலை உயர்ந்த பட்டாடையை அந்த உருவத்தின் மீது போர்த்திவிட்டுப் போகிறார். காலை புலர்ந்தவுடன் பல்லக்கு அனுப்பி — அனுதாபத்துக்குரிய அந்த உருவத்தை — மனிதனை — அரச மரியாதையோடு அழைத்துப் போகிறார். விபரங்கள் கோரப்படுகின்றன; கூறப்படுகின்றன.

"அப்படியா சேதி?"

"ஆமாம்" என்று தலையாட்டுகிறது அந்த மனித உருவம்.

"உம் பெயர் என்ன?"

"பாட்டுக்காரன்..."

"பாட்டுக்காரன்..." மாமன்னரின் வாய் முணுமுணுக்கிறது.

"பாட்டுக்காரனே! இன்றுமுதல் உமக்கு பாட்டுக்காரன் என்று பெயர் இல்லை. உம் பெயர் சற்று புதுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக மாற்றி — "பாடல் வல்லான்" என்று அழைக்கிறேன். நீ எதற்கும், எவர்க்கும் அஞ்ச வேண்டாம்; அஞ்சேல்; தெருவெங்கும் பாடித்திரிய வேண்டாம். இனிமேல் நீர் தேவாலயத்தில் பாடலாம்; பாட வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. இன்னப் பாட்டுத்தான் பாடவேண்டும் என்ற நிபந்தனையின்றி—கானாற்றைப் பற்றிப் பாடலாம்; காகத்தைப் பற்றி—கோலமயிலைப் பற்றி — மழை மேகத்தைப்பற்றி பாடலாம். நாடும் நாட்டு மக்களும் இறைவன் —இயற்கை வடிவிலே—ஏழையின் சிரிப்பிலே-குழந்தையின் வடிவிலே இருப்பதாக உணருகிறது. அதனால் தான் இறைவனைப் பற்றியே பாட வேண்டும் என்றில்லாமல் இயற்கையைப் பற்றியும் பாடலாம் என்பதற்காகச் சொன்னேன்" என்று அறிவுரைப் புகட்டி; எவனுக்கு புது வாழ்வளித்தாரோ—அந்தப் பாடல் வல்லான் இன்று...

ஃ ஃ ஃ

"வேந்தே..." அவர் சிந்தனை அலை கரையை அடைந்தது.

"வேதனை தீரவில்லை அமைச்சரே..." என்று சொல்லிக் கொண்டே அரசவையை—சிம்மாசனத்தை விட்டு எழுகிறார்.

மன்றம் மரபுக்காக எழுந்து நிற்கிறது. உளச் சோர்வோடு உடற் சோர்வும் சேர்ந்து கொண்டாற்போல்நடக்கிறார்-மாமன்னர்.

அவரின் நிழல்போல் அமைச்சரும் பின் தொடர்கிறார்.

"மன்னர் பிரானே...!"

"உம்..."

"தெருப்பாடகன்தானே அவன், அதற்குரிய அறிவுதானே இருக்கும்? அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம்."

"இருந்தாலும் அவனுக்கொரு தெளிவு இருக்க வேண்டாம்?"

"புழுதிக்குத் தெரியுமா பொற் கலசத்தின் பெருமை?"

மாமன்னர்—ராஜராஜ சோழன் அமைச்சரின் உரையை கேட்டுக் கொண்டே மறுமொழி ஏதும் புகலாமல் அமைதியாக நடந்து கொண்டிருக்கிறார் — அந்தப் புரத்தை நோக்கி!

*



# டாக்டர் அண்ணுவும் - பேராசிரியர் லாஸ்கியும்

டாக்டர் வி. சண்முகசுந்தரம், B.A., (Hons.)

சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவராயிருந்த அண்ணு அவர்கள், ஒரு செல்வந்தன் மகனுக இருந்திருந்தால் சீமைக்குச் சென்று பேராசிரியர் லாஸ்கி அவர்களிடம் அரசியலும் பேராசிரியர் இராபின்ஸனிடம் பொருளியலும் கற்றிருப்பார். சாதாரணக் குடிமகன் என்ற நிலையால், பணமில்லாத குறையினுல், ஒரு நூற்ருண்டு காலத்துக்கு மேலாக ஏழை எளிய மக்களுக்கு கல்வியறிவு ஊட்டிவந்த பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிட்டியது. அந்த அறநிலையத்தார் ஒரு மாமேதைக்கு கல்வி அளித்தோம் என்ற பெருவாய்ப்பினையும் பெற்றனர். அப்படிப்பட்ட நல்ல பல அறநிலையங்கள் உருவாக வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் அண்ணு விரும்பியதில் வியப்பில்லை.

அறிவுத்துறையில் எப்போதுமே ஆர்வமிக்கவ்ராயிருந்த அண்ணு அவர்களைப்பற்றி எழுதும்போது, அவர் இப்போது நம்மிடையே உயிருடனிருந்தால் எந்தக் கருத்துக்களை கூறி அதற்கு, மறுப்போ ஒப்புதலோ பெறுகின்ற எண்ண அலைகளிலே என் கருத்துக்கள் அமையும் என்ற எண்ணத்தால் எண்ணி, “அண்ணு—வழி வழி பேராசிரியர் லாஸ்கியின் மாணவர்” என்ற கருத்தினை ஒட்டி இக்கட்டுரை அமைகின்றது. மேலும், திரு. இரத்தினசாமி அவர்கள், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் செதுக்கித்தந்த சிறந்த சரித்திரக் கருத்துக் கருவூலம் என்றும், பின் தங்கிய மக்களுக்கு வெகு காலம் உழைத்த பெருமையுடையவர் என்றும் கருதப்பட வேண்டியவர்; அதுபோலவே தென்னிந்திய, சென்னை மாநில சரித்திரங்களை நமக்கு எழுதித்தந்த பேராசிரியர் சீனிவாசாச்சாரியார் அவர்களும், அண்ணுவின் மதிப்பை அதிகம் கவர்ந்தவர்கள். திரு. திருவேங்கிடசாமி பிள்ளை என்ற ஆங்கிலப் பேராசிரியரும். திரு. வரதராசன் என்ற மற்ருெரு ஆங்கிலத்துறையில் இருந்து கொண்டு பொது அரசியல் பிரச்சினைகளில் முழு ஆர்வம் கொண்டிருந்த பேராசிரியரும்—ஆங்கிலம், சரித்திரம் பொது வாழ்க்கை என்ற அண்ணுவின் எண்ண அலைகளைப் பயன்படுத்தியவர்கள்.

அரசியலுக்கு அணிகலனுக அமைவது, எண்ணத்திலும் செயலிலும் உள்ள துணிவுடைமையாகும்; அதனை அண்ணுவிடம் ஊக்கியவர்கள் பலர். அண்ணு கல்வி பயின்ற ஆண்டுகளில், சென்னை இராசதானி என்று அழைக்கப்பட்ட (Madras Presidency) இன்றைய ஆந்திர நாடு, கேரளம், மைசூர் ஆகியவற்றின் பகுதிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அமைப்புக்குள் அடங்கியிருந்தன. ஒவ்வொரு பேராசிரியரும் உலகின் சிறப்புமிக்க பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றுத்தான் உயர் கல்வி விரிவுரையாளர்களாகத் தகுதி பெற்றனர். மிகச் சில எண்ணிக்கையினர், மாணவர்களாக அக்காலத்தில் உயர்கல்வி பெற்றமையால், ஆசிரிய மாணவத் தொடர்பும் நெருக்கமானதாக அமைந்திருந்தது. ஒரு அறிஞரைப்பற்றி எழுதும்போது அவர் எத்தகைய நூல்களைப் படித்தார், எந்த ஆசிரியப் பெருமக்களுடன் எண்ணப்பரிமாறல் நிகழ்ந்தது, என்றெல்லாம் ஆராய்வது இயல்பு. அவ்வகையில் நாம் எண்ணிப் பார்க்கும்போது. திரு அண்ணு அவர்கள், சமுதாய நலன் பேணிய ஜஸ்டிஸ் கட்சி அரசியலில் அதிகமாக ஈடுபட்டிருந்த பேராசிரியருடன்தான் பற்று அதிகம் வைத்திருந்தார் என்பதும் புலனுகும். அதற்கு முக்கிய காரணம் தென்னுட்டில் தான் வட நாட்டைவிட தீவிரமாக சமுதாய வேறுபாடுகளைக் குறைக்கவேண்டும் என்ற நோக்கம், அரசியல் பொருளியல் சுதந்திரத்துக்கு ஒப்பாக கருதப்பட வேண்டியது என்பதும், சமுதாயச் சமநிலை என்ற நோக்கம் இன்றியமையாதது என்பதும் மக்களிடையே வெகுவாக பரவியிருந்தது, சென்ற அரை நூற்ருண்டாக எந்த அரசியல் கட்சியும் தென் இந்தியாவைப் பொருத்த வரையில் இந்தச் சமுதாய நோக்குக்கு உட்பட்டுத்தான் மக்கள் செல்வாக்கு பெற்றிருந்தது.

பல நூல்களை விரும்பிய ஒரு மேதை, தன் அருகில் உள்ள நூல்களின் மூலம் காலத்துக்கு எட்டாத கருத்துச் சிற்பிகள் பலரைக் கண்டு களித்திருக்கலாம் என நம்பினர். அத்தகைய உறுதி கொண்டவர் அண்ணு. பல நூல்கள் மட்டுமின்றி, அந்நூல்களுக்கொப்பான சிறப்புக்குரிய பலரை-ஆசிரியர்களாக, மாணவர்களாக பெற்ற புகழுடையது பச்சையப்பன் அறநிலையம். ஆல்பிரடு மார்ஷலிடம் (Alfred Marshall) கேம்பிரிட்ஜ் சென்று பயிலக்கூடியவற்றை, பேராசிரியர்கள் பி. ஈ. ராபர்ட்ஸ் (P. E. Roberts) எச். டபிள்யூ. சி. டேவிஸ் (H. W. C. Davise). பேராசிரியர் இ. லிப்ஸன் (E. Lipson)) போன்றவர்களிடம் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பயிற்சி அடையக்கூடியவற்றை—டாக்டர் வி. கே. ஆர். வி. இராவ்,பேராசிரியர் பி.ஜே. தாமஸ் (P.J. Thomas), டாக்டர் பி. எஸ். லோகநாதன் ஆகியவர்களுக்கு ஆசிரியராயிருந்த திருமதி. வீரா ஆன்ஸ்டி (Mrs. Vira Anste) அவர்களிடம் அறிய வேண்டியவற்றை—அவர்கள் அனைவரையுமே அறிந்திருந்த அறிஞா பெருமக்கள் பலரிடம் அண்ணு அவர்கள் நெருங்கி பழகியிருந்தார்.

இத்தகையக் கருத்துடைய பச்சையப்பன் கல்

லூரியில் பணியாற்றிய ஒரு பேராசிரியர் திரு. கடலூர் துரைசாமி இராஜேஸ்வரன் அவர்கள். நல்ல வசதி வாய்ந்த வழக்கறிஞர் மகன் என்ற செல்வாக்காலும், டாக்டர் அன்னி பெஸண்ட் (Dr. Annie Besant) பி. பி. வாடியா (B. P. Wadia) திரு. ஜீனராஜமதாஸா போன்ற பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தோரின் நட்பு இளமையிலேயே ஏற்பட்டிருந்த காரணத்தாலும், சோஷலிஸக் கருத்துக்கு, இங்கிலாந்தின் உறைவிடமான 'இலண்டன் பொருளியல் அரசியல் கல்விக் கூடத்தில் (London School of Economics and Political Science) மேல் படிப்புக்குச் செல்லும் வாய்ப்பு பெற்றவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில், அண்ணு மாணவராக இருந்த காலத்திலும், பிறகும் பணியாற்றி வந்தார். மாணவ நாட்டுதொட்டு தான் மறையும் நாள் வரை அண்ணு அவர்கள் பேராசிரியர் இராஜேஸ்வரன் அவர்களை அன்புடன் நேசித்து வந்தது மட்டுமின்றி பொதுக் கூட்டங்களில் "நான் பேராசிரியர் இராஜேஸ்வரன் மூலம் பேராசிரியர் லாஸ்கியின் வழிவழி வந்த மாணவன்" என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்வார்.

இப்படிக் கூறுகின்ற சமயத்தில் அவர் எடுத்தாண்ட கருத்துக்கள் பல இப்பொழுதும் பலருக்கும் ஞாபகம் இருக்கும். அந்த எண்ண அலை மோதல்கள் சிலவற்றை இங்கு காணலாம், பேராசிரியர் இராஜேஸ்வரன், லேனல் இராபின்ஸ் (Late Lord Lionell Robbins) என்பாரின் வகுப்புத் தோழன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

லாஸ்கி ஒரு பெரிய பேராசிரியர்; ஆனல் தொழில் கட்சிக்கு தலைமை வகிக்கும் பொறுப்பு தன்னைவிட அட்லி (C. Atlee) போன்றவருக்குப் பொருந்தும் என்று நம்பியவர். அவ்வகையிலேதான் அண்ணு அவர்கள் எந்தவிதப் பிரச்சினை ஆனுலும் நம்பிக்கைக்கு பாத்திரமானவரைத் தேர்ந்தெடுத்து, இன்னூர் இதனைச் செய்யவேண்டும் என்ற வழிப் படுத்தும் இயல்பினர். லாஸ்கி படித்த நூல்கள் கணக்கிலடங்கா. அவ்வாறே அண்ணுவும் விரும்பிப் படித்தப் புத்தகங்கள் எத்தனையோ ஆயிரம். ஒரு முறை, மறைந்த பேராசிரியர். தியாகராயா கல்லூரி முதல்வர், எம் கே. சண்முகம் அவர்களுடன் நான் அண்ணு அவர்களை நிதி திரட்டும் நாடக நிகழ்ச்சிக்கு அழைக்கச் சென்றிருந்தபோது ஒரு சில நிமிடங்களில் எத்தனையோ புத்தகங்களைப் பற்றி மின்னல் வேகத்தில் ஆய்ந்த நிகழ்ச்சி, இருபது ஆண்டுகளுக்குப் பின்பும் என் மனக்கண்முன் இப்பொழுதும் நிகழும் காட்சியாக அமைகிறது. லாஸ்கியின் 'அரசியல் இலக்கணம்" (A Grammar of Politics) "Authority as Federal"......! என்ற ஒரு சிறப்புமிக்க ஏழாவது பிரிவினை எழுதியிருக்கின்ருர். இதனை எழுதுமுன் (The Problem of Sovereignty 1917), Authority in the Modern State (1919), The Foundations of Sovereignty (1921) என்ற பல புத்தகங்களை— பெர்டிராண்ட்ரசல், கிரகாம் வாலஸ் (Graham Wallas), லார்ட் ஹால்டேன் (Lord Haldane), ஜஸ்டிஸ் ஹோம்ஸ் (Justice Hohnes) போன்ற பேரறிஞர்களிடம் நட்புகொண்டு எழுதியிருக்கிருர். எனினும் 1921-ல் எழுதிய "அரசியல் இலக்கணம்" என்ற நூலுக்கு உலக அரசியல் கருத்துக் குவியலியே இணையில்லை. இந்தப் புத்தகம் எழுதப்படும் போது லாஸ்கியின் மாணவராயிருந்தவர் பேராசிரியர் இராஜேஸ்வரன் அது மட்டுமின்றி பேராசிரியர் லாஸ்கியின் தனி பயிற்சிப் பொறுப்பில் இருந்த ஒரு சில மாணவர்களுள் பேராசிரியர் இராஜேஸ்வரனும் ஒருவர். இங்கிலாந்து நாட்டிலே அப்போது ஒரு மரபு இருந்தது. ஒவ்வொரு ஆசிரியரும் தனது விரிவுரைக்கென்று ஆராய்ச்சி செய்து விரிவுரை நிகழ்த்துவர். ஒரு சில கருத்துக்களை மட்டும் புத்தக வடிவில் வெளியிட்டு, மற்றவற்றை மாணவர் பயன்படுத்தவிட்டு விடுவர். அம்மரபுப்படி பேராசிரியர் சி. டி. இராஜேஸ்வரனிடம் லாஸ்கி பல விரிவுரைக் கருத்துக்களைக் கொடுத்திருக்கிருர். சி. டி. ஆர். பேசுகின்ற முறையும், விரிவுரை நடத்துகின்ற முறையும் கருத்துக்களை அலசிப் பார்க்கும் கல்லூரி முறைக்குப் பொருத்தமான தன்மையதாக அமையும். அம்முறை புத்தகத்திலிருந்து மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் முறையுடன் வேறுபட்டது. அவ்வழியில அண்ணு லாஸ்கி வழி வந்த மாணவர் என்ற முறையில் எதையும் ஆராய்வதோடன்றி அரசியலுக்கு இலக்கணம் காண்பதுடன் தானே அரசியலுக்கு இலக்கணமாக அமைவதோடன்றி தன் போன்ற அரசியல் நண்பர்களையும் உருவாக்கினுர்.

அக்கருத்துக்களை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதில் ஈடு இணையற்றவர் அண்ணு, எதனை, எப்போதுகூறவேண்டும் என்பதை நன்குஅறிந்தவர். திரு பெர்னூர்டுஷா (BernardShaw) தான் ஷேக்ஸ்பியர் நன்கு படித்த காரணத்தால், அதற்குப் பிறகு நாடகங்கள் எழுதியமையால், தான் ஷேக்ஸ்பியரைவிட உயர்ந்தவர் என்று கூறுவது உண்டு. அண்ணு அவை அடக்கம் காரணமாக, தான் லாஸ்கியைவிட பெரியவர் என்று கூறுவிட்டாலும், தமிழகத்தின் பட்டி தொட்டிகளில்—பேராசிரியர் இராஜேஸ்



வரன் முதலியோர் சென்று காணாத கூட்டங்களில், ஆயிரக்கணக்கில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் மன்ற தோழர்களை ஊக்குவித்ததில், அண்ணா மாபெரும் சாதனையை நிகழ்த்திவெற்றிகொண்டார்.

அண்ணா அவர்களின் அரசியல் பள்ளியில் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" முதலியவற்றை பயின்ற மாணவர்கள் இன்று தமிழக அரசினை நடத்தும் அளவிற்கு சிறப்பு அடைந்திருக்கின்றனர். இங்கிலாந்து நாட்டின் தொழிற் கட்சியின் சார்பில் பேராசிரியர் லாஸ்கி அடைந்த வெற்றிக்கு ஒப்பானது இது. கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி, நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன். அவர்களில் இளவல்கள், சென்னை நகரப் பாராளுமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற திரு. முரசொலி மாறன், திரு. நாஞ்சில் மனோகரன், திரு. நெல்லிகுப்பம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அண்ணாவின் இளம் அரசியல் மாணவர்க்ள் அதே பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவரே.

அண்ணாவின் கூட்டமைப்புக் கருத்து நாட்டுக்குத் தந்த உயில். அதனை செயல் படுத்தும் வாரிசு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி தமிழக முதல்வர் என்ற முறையில் இக் கருத்தினைப் பல கோணங்களில் அவர் காண்கிறார். அண்ணாவின் கூட்டமைப்பு அரசியல் கருத்து பலருக்கு கடினமாக தோன்றலாம். அவருக்கும் அது தெரியாததல்ல. லாஸ்கி இதைப் பற்றி எழுதும்போதுகூட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கிரேக்க மேதை பிளாட்டோ (Plato) மற்றும் ஸ்பினோஸா (Spinoze) வையும் மனதில் இருத்தி "All things excellent are as difficult as they are rara. We can reach the summit in the end if we but seek the sourage to go forward" என்று கூறுகிறார். லாஸ்கி, மாணவர்களுக்கு இதை அரசியல் பாடமாக கற்பித்தார். அண்ணா இலட்சக் கணக்கான அரசியல் மாணவர்களால், அரசியல் தலைவர்களால் அன்புடன் "அண்ணா" "பேரறிஞர்" என்று அழைக்கப்படுகின்றார். லாஸ்கி மறைந்த பிறகு அரசியல் பூசல்கள் காரணமாக அவர் விரும்பிப் பணி புரிநத இலண்டன் பொருளியல் அரசியல் பள்ளியில் (London School of Economics & Politics) கல்வி நிலையத்தில் அவரது உருவப்படத்துக்குக்கூட இடமில்லை என்று அன்னாரின் மனைவி பரிதா லாஸ்கி (Farida Laski) என்னிடம் 1965-ல் கூறியது நினைவுக்கு வருகின்றது. நிலைமை இன்றுவது மாறிற்றோ, இல்லையோ! 'ஆயினும் லாஸ்கியின் வழிவழி வந்த மாணவர்' பிளாட்டோ (Plato) வழிவந்த அரிஸ்டாடில் (Aristotle) போல உலகம் போற்றும் வகையிலும், என்றென்றும் மனதில் வைத்துப் போற்றும் வகையிலும் தமிழகமெங்கும், இந்தியா முழுவதும், தமிழ் மக்கள் வாழும் உலகப் பகுதி முழுவதும் புகழ் மிக்கார் ஆகிவிட்டார். அண்ணா மூலம் லாஸ்கி வெற்றி பெற்றார் என்று கூறின் அது மிகையாகாது.

இந்திய நாட்டு அரசியல் பொருளியல் கருத்து வரலாறு எழுத இன்றியமையாத ஒரு நிகழ்ச்சி. பேரறிஞர் அண்ணாவைப்பற்றி யேல் (Yale) சிகாகோ (Chicago) பிரின்ஸ்டன் (Princeton) இலண்டன் (London) கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகங்களில் ஆயப்படுகின்றது. சென்னையில் அவர் பிறந்து வாழ்ந்தார்—அவரை நமக்குத் தெரியும் என்ற காரணத்தால். தெரிந்தோரை போற்றக்கூடாது என்ற நீதான எண்ணத்தை விடுத்து—ஆராய்ச்சி வழி அண்ணாவின் சிந்தனைகளை அரசியல், பொருளியல் சிந்தனையாளர் தொகுத்து, ஆய்ந்து பல நூல்களை வெளியிட வேண்டும்.

*


வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

சூர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற

வர்ணஜால ஆடைகள் ...

கோ-ஆப்டெக்ஸ்

சகாயமான விலை ...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு

கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னை-8

# டாக்டர் கலைஞர் வாழ்க!

(பொன்னகர் மாணிக்கம், எம்.எல்.ஏ.,)

★

அண்ணனின் அரசியல் பின்னணி வரிசையில்
ஆட்சியைக் கொண்டு நன்று—அதில்
மாட்சியைக் கண்டு நின்று—தமிழ்
மண்ணினம் புகழ்ந்திடும் வண்ணமே தகையொடு
மாநிலம் வீற்றதினால்—பிற
மாநிலம் போற்றுவதால்—நம்
முதல்வரைப் பண் பாடுகின்றேன்;—தமிழ்ப்
புதல்வரைக் கொண் டாடுகின்றேன்!

அரியணை மத்தியில் உரியவை மொத்தமும்
அதிகமாய் அங்கிருக்க—அதை
எதிர்த்துப் பங்களிக்க—நம(து)
உரிமையைக் குரலினில் உறவினைக் கரத்தினில்
உறுதியாய்ப் பேணுவதால்—அதை
இறுதியாய்ப் பூணுவதால்—புகழ்
முதல்வரைப் பண் பாடுகின்றேன்;—தமிழ்ப்
புதல்வரைக் கொண் டாடுகின்றேன்!

இறைவனும் இருப்பது ஏழையின் சிரிப்பிலே
என்றவோர் நோக்கமாக—அதில்
நின்றுவோர் ஊக்கமாக—அது
விரைவினில் செய்தொடு நிறைவினை எய்திட
விரும்பியே போற்றுவதால்—பயன்
அரும்பிட கற்றுவதால்—உயர்
கலைஞரைப் பண் பாடுகின்றேன்;—என்
தலைவரைக் கொண் டாடுகின்றேன்!

அன்பினால் உயர்ந்தவோர் பண்பினால் உயர்ந்திடும்
அறவழி தனில்செல்லும்—பய
னுறவழி தனைச்சொல்லும்—ஒரு
நண்பராய் ஏவலால் தொண்டராய்க் காவலாய்
நமையெலாம் அணைப்பதாலே—பகைவர்
தமையெலாம் இணைப்பதாலே—புகழ்
கலைஞரைப் பண் பாடுகின்றேன்;—எவ்
தலைவரைக் கொண் டாடுகின்றேன்!

நாட்டினில் ஒழுங்கினைக் காட்டியே முழுநிலை
நாட்டிடும் திறம் கொண்டு—அமைதி
கூட்டிடும் அறம் உண்டு—எனில்
ஏட்டினில் வரைந்திடும் பாட்டொரு உரைநடை
எழுத்திலும் ஆளுவதால்—மன
எழுச்சியில் வாழுவதால்—மா
கவிஞரைப் பண் பாடுகின்றேன்;—என்
கவியினில் கொண் டாடுகின்றேன்!

தலைவர் முதல்வர் தமிழ்த்தாய்ப் புதல்வர்
தாயகம் வளமுறவே—தமிழ்
நாயகன் நலமுறவே—நம்
கலைஞர் தமிழ்வேள் கவினுறு டாக்டர்
காலமும் நீடு வாழ்க—புகழ்க்
கோலத் தோடு வாழ்க—எனக்
கவிஞரைப் பண் பாடுகின்றேன்;—இப்
புவியினில் கொண் டாடுகின்றேன்!



## மொழிக்கட்டுரை

# மொழி

வித்துவான்
தே. வே. சந்தானம்

பறவைகளும் விலங்குகளும் ஒலிகள் செய்யுமாயினும் அவ்வொலிகள் பொருள் இல்லாதன. அவை ஒலி மூலம் அச்சம், ஆசை முதலியவற்றைத் தெரிவிக்கும். ஆனால் அவை கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்க முடியாது, மனிதன் மட்டுமே தன் உணர்ச்சியையும் கருத்தையும் பிறர்க்குக் கூறக் கூடியவனாயிருக்கிறான். மனிதர்களுள் தொடர்புண்டாவதற்கு மொழி அடி நிலையாக உள்ளது.

மொழி என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஒன்றன்று; மனிதன் தான் அமைத்துக் கொண்ட ஒரு கருவியாகும். மனிதர்கள் இன்ன ஒலிக்கு அல்லது இன்ன ஒலித் தொகுதிக்கு இன்ன பொருள் என்று முடிவு செய்வதால் மொழி உண்டாகின்றது. பேச்சு மொழி போலவே எழுத்து மொழியும் ஒரு செயற்கைப் பொருளே. அதாவது இன்ன ஒலிக்கு இன்ன உருவங்கள் என்று மக்கள் முடிவு செய்து அமைத்ததாகும்.

### மொழியின் தோற்றம்

மொழி தோன்றியது எவ்வாறு என்பது பற்றிப் பண்டைக்கால முதல் அறிஞர்கள் பலவாறு கருத்துக்கள் கூறியுள்ளனர். பண்டைக் காலத்தில் இருந்த கிருஸ்துவ அறிஞர்கள் கடவுள் மனிதனைப் படைத்தவுடனே அவனுக்கு மொழியும் படைத்துத் தந்தார் என்று கூறினர். எகிப்தியர் சீனர், கிரேக்கர், ஸ்காண்டினேவியர் போன்ற மக்கள் எல்லோரும் மொழியைத் தோற்றுவித்தவர் கடவுளே என்று கூறி, அக்கடவுளுக்குத் தாங்கள் கொண்டுள்ள பெயரையே கூறுவர்.

மொழியானது மனிதனுடைய மனித இயற்கையான படைப்பாகும் என்றுசில அறிஞர் கூறுவர். இவர்கள் கூற்றுக்கு அரணாக அமைவது டார்வின் என்னும் விஞ்ஞான அறிஞரின் பரிணாமம் என்னும் கொள்கையாகும்.

முதலில் மக்கள் விலங்குகள் செய்யும் ஒலிகளைப் போன்ற ஒலிகளையே செய்தனர். இதை ஒலிக் குறிப்பு வகை என்பர். சிலர் அச்சம், மகிழ்ச்சி, வியப்பு முதலிய உணர்ச்சிகள் எழும்போது மக்களின் வாயினின்று தாமாகவே எழும் ஒலிகளிலிருந்தே மொழி என்பது தோன்றிற்று என்பர். சிலர் மக்கள் “சைகை காட்டும் போது அவர்களுடைய நாக்கு அவர்களை அறியாமலே சைகைக்குத்தக்கவாறு ஒலி செய்யும். அதிலிருந்தே மொழி உண்டாயிற்று” என்பர். இதை சைகைக் கொள்கை என்பர்.

இக்காலத்தில் மொழி அறிஞர்கள் மொழியின் தோற்றம் இது என்று உறுதிப் படுத்த முடியா நிலையில் உள்ளோம் என்றே முடிவு செய்திருக்கிறார்கள். (1) குழந்தைகளின் முதற் பேச்சு துவக்கம் (2) ஆதிக் குடிகளின் மொழிகள் (3) மொழியின் வரலாறு முதலியவற்றை ஆய்ந்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சியும் மொழியின் வளர்ச்சியைப்பற்றிய அறிவைத் தருமேயன்றி தோற்றத்தைப் பற்றி அறிவதாயில்லை” என்று தமிழ் கலைக் களஞ்சியம் செப்புகின்றது.

அறிஞர்களை கலக்கி வரும் மற்றொரு மொழிப் பிரச்சனை யாதெனில் உலகில் முதலில் ஒரு மொழி தோன்றியதா? அல்லது பல்வேறு இடங்களில் பல மொழிகள் தம் முன் தொடர்பின்றி தோன்றி அவற்றிலிருந்து பிற்காலத்தில் பல மொழிகள் தோன்றியனவா என்பதாம். இதற்கு இன்னும் முடிவான விடை காண இயலாதிருக்கின்றனர். 1931-ல் அறிஞர் ஈக்கர்ஸ் என்பவர் உலகில் இறந்தவையும் இருப்பவையுமான மொழிகள் 176 என்று கணக்கிட்டுள்ளார்கள்.

### மொழியில் ஒலி முறை

ஆதியில் மனிதன் பேசியபோது ஒலிகளை உயிர்மெய் முதலியனவாகப் பாகுபடுத்தி உணர்ந்து பேசவில்லை. சொற்களை பெயர், வினை, இடை என்று பாகுபடுத்தியும் அடிச் சொல் பிற உறுப்புக்கள் என்று பிரித்துணர்ந்தும் பேசவில்லை. கருத்துக்களுக்கு அறிகுறியாக நீண்ட ஒலித் தொடர்களையோ குறுகிய கூட்டொலிகளையோ பேசினான். நெடுங்காலத்துக்கு பின்னரே சொற்றொடர்களின் உறுப்புக்களான சொற்களைப் பிரித்துரைக் கற்றான்; எழுதக் கற்றுக் கொண்ட பின்னரே அச்சொற்களின் உறுப்புக்களான ஒலிகளைப் பிரித்துணரக் கற்றான். இவ்வாறு வளர்ந்த வளர்ச்சியே இலக்கணமும் பாகுபாடும் விரிவாக வளர அது உறுதுணையாயிற்று’ என்று டாக்டர் மு. வ. கூறுகிறார்.

மொழியின் ஒலிகள், உயிரெழுத்துக்கள் என்றும் மெய்யெழுத்துக்கள் என்றும் பிரிக்கப்படும். உள்ளிருந்து எழும் மூச்சு, மிடற்றின் முயற்சியுடன் வாயின் வழியாக வெளிப்படும்போது தடையின்றி வெளிப்படின் உயிரெழுத்துக்கள் தோன்றும், உயிரும் மெய்யும் ஆகிய இந்த ஒலிகளை அவை பிறக்கும் முயற்சி பற்றியும் இடம் பற்றியும் பலவாறு பாகுபாடு செய்வர்.

### மொழியின் பகுப்பு

மொழியில் ஒலிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்று ஆராய்தல் ஒலி நூல் (Phonology) என்பர். பேசும்போது ஒலிகள் பிறக்கும் முறை, இசையும் முறை முதலியவற்றை ஆராய்தல் ஒலியியல் (Phonetics)என்பர். ஒருமொழிக்கு உரியனவாய்த் தெளிவாக விளங்கும் ஒலிக் கூறுகள் இன்ன என்று ஆராய்தல் மொழி ஒலியியல் (Phonemics) என்பர்.

மனிதனின் குரலில் பிறக்கும் ஒலிகள் கணக்கற்றவை. அவை அனைத்தும் மொழியின் கூறுகளாக அமைவதில்லை. சில ஒலிகளையே மொழிகள் பயன்படுத்தும் சில ஒலிகளை மற்றொரு மொழி பயன்படுத்தாமல் விடுதலும் ஒரு மொழிக்குத் தேவையற்ற சில ஒலிகள் மற்றொரு மொழிக்குத் தேவைப்படுத்தலும், ஒரு மொழிக்குச் சிறப்பற்ற ஒலிகளாய் ஒதுங்கி நிற்றலுமுண்டு. எ, ஒ, ழ, ற ஆகியவை தமிழுக்கு இன்றியமையாதவை; வடமொழிக்கு மெல்லொலிகளாகிய க, த, ட, ப ஆகியவை

தமிழில் உள்ளன. எனினும், அவற்றிற்குத் தனி எழுத்து வடிவங்கள் இல்லை. ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய சில மொழிகளில் உள்ள ஒருவகைப் பகரம் (F) வேறு பல மொழிகளில் இல்லை.

அக்கடல் என்பதில் கடல் என்பதில் கடல் என்பதின் முதல் ஒலி வன்மையாகவும். ஆழ்கடல் என்பதில் மென்மையாகவும் இருத்தல் காணலாம். ஆயினும் 'க' என்பது ஓர் எழுத்தாகவே உள்ளது. ஒலிவகையில் ஆரார்ய்ந்தால் இரு வகை ஒலிகள் உள்ளன. ஆயினும் 'க' என்னும் ஓர் எழுத்தேபோதும் எனக் கொண்டனர்.

தமிழில் 'க' என்னும் ஓர்ஒலியே சிறந்து நிற்றலும் அதுவே சில இடங்களில் மெல்லொலியாக ஒலித்துச் சிறப்பின்றி நிற்றலும் காரணம் ஆகும். இவ்வாறு அந்தந்த மொழி வழக்கு நோக்கிக் கொள்ளப்படும் அடிப்படை ஒலி முதலொலி (Phoneme) எனவும் அதைச் சார்ந்து பிறக்கும் மற்ற ஒலி, சார்பொலி (Allophone) எனவும் கூறப்படும்.

ஒவ்வொரு மொழியும் அதைப் பேசும் தனி மனிதரின் உரிமையாகவும், அவர் வாழும் சமுதாயத்தின் உடைமையாகவுமிருந்து வரக் காண்கிறோம். ஆயினும் தனி மனிதர் தம் விருப்பம்போல் மொழியின் கூறுகளை மாற்றவோ திரிக்கவோ இயலாது. சமுதாயம் கூடி முடிவுசெய்து மாற்றுவதும் திரிப்பதும் இல்லை. ஒவ்வொரு மாறுதலும் திரியும் யாரோ ஒரு தனி மனிதரிடம் அவர் அறிந்தோ அறியாமலோ எப்படியோ தோன்றிச் சமுதாயத்தில் படிப்படியாக ஏற்கப்பட்டு நிலைபெறுகின்றன.

மொழி, பேச்சுமொழி, எழுத்து மொழி என இருவகைப்படும். பேச்சு மொழியே உயிருள்ள மொழியாகும். எழுத்து மொழி கற்றவர்கள் சிலர் கூடி அமைத்துக் கொண்டது. பேச்சு மொழி வாழும் மனிதனைப் போன்றது. எழுத்து மொழி அவனுடைய படம் போன்றது.

## பிறநாட்டு எழுத்து வகை

வெ - ளி - ச் - ச - ம் என்ற ஐந்து எழுத்துக்களை தமிழில் எழுதுகிறோம். ஆனால் சீன மொழியில் சூரியன்போல் ஒரு வட்டம் எழுதி அதன் பக்கத்தில் சந்திரன்போல் சின்ன வட்டமும் சேர்த்து எழுதினால் அது வெளிச்சமாகும். சூரியனும் சந்திரனும் இருந்தால்தானே வெளிச்சம்? அதனால் அந்த உருவங்களையே எழுதுகிறார்கள். இப்படியே ஒருவன் அழுவதைத் தெரிவிக்க வேண்டுமானால் கண்ணீர் என்று எழுதவேண்டுமானால் கண்ணைப்போல் ஒரு எழுத்து எழுதி அதன் பக்கத்தில் ஒரு துளித் தண்ணீரைப்போல் ஒரு புள்ளியைப் போடுவார்களாம். சீன எழுத்துக்கள் ஒரு காலத்தில் 40,000 எழுத்துக்கள் பெற்று இருந்தனவாம். அப்போது சீன எழுத்துக்கள் சித்திரங்களாக இருந்தன. எகிப்து மொழியிலும் சிங்கத்திற்கு 'லாபோ' என்று பெயர். 'லாபோ' என்ற எழுத்து எழுதவேண்டுமானால் சிங்கத்தின் படத்தையே எழுதினார்கள். இப்போது அந்த படம் மாறிமாறி ஒரு சிறு எழுத்து ஆக மாறிவிட்டது.

சில மொழிகளில் எழுத்துக்களில் புள்ளி மிகுதியாக இருக்கும். வேறு சிலமொழிகளில் கோடுகள் நிறைய இருக்கும். வேறு சில மொழிகளில் வளைவுகள் நிறைய இருக்கும். நம்முடைய நாட்டில் பனை ஓலைகளில் எழுதிப் படிக்கிறார்கள். சில நாடுகளில் ஆடு, மாடு முதலியவற்றின் தோலில் எழுதிப் பழகினார்கள். சில நாடுகளில் மண் மெழுகிய ஓடுகளின்மேல் கீறல் கீறல்களாக எழுதிப் பழகினார்கள். இப்படி வேறு வேறு பொருளினால் வேறு வேறு கருவியால் எழுதிக் கொண்டார்கள்.

## எழுதும் முறை

நாம் இடப் பக்கத்திலிருந்து வலப் பக்கத்தை நோக்கி எழுதுகிறோம். உருது எழுதுபவர்கள் வலத்திலிருந்து இடமாக எழுதுகிறார்கள். கிரேக்கர்கள் முதலில் இரண்டு வகையாகவும் கலந்து எழுதினார்கள். சீன மொழியில் வலக்கை ஓரமாக மேலே இருந்து கீழே எழுதிக்கொண்டு வர வேண்டும். 'அழகு' என்றால் நாம் அ - ழ - கு என்ற மூன்று எழுத்துக்களையும் பக்கம் பக்கத்தில் எழுதுகிறோம். சீன மொழியில் அப்படி அல்ல. மேலே 'அ', அதற்குக் கீழே 'ழ'. அதற்குக் கீழே 'கு' என்று எழுதவேண்டும். ஜப்பான்காரரும் அப்படித்தான். ஆனால் அவர்கள் இடக்கை ஓரமாக எழுதுகிறார்கள்.

## சமூகக் கலை

நாம் வீடு கட்ட வேண்டுமானால் நினைத்தபடி நம் விருப்பம்போல் கட்டிக்கொள்ளலாம் இன்னொருவரைப் பற்றிக் கவலைப் படாமல் நம் வீட்டை நாம் கட்டிக்கொள்ளலாம். வீடு தனித் தனியாக அவரவர் விருப்பம்போல் அமையும் கலை; தனிப்பட்டவரின் கலை. ஆனால் மொழி அப்படிப் பட்டது அல்ல, மொழி தனிப்பட்டவரின் கலை அல்ல; எல்லோரும் சேர்ந்து ஒரு மனதாய் வளர்க்கும் கலையே மொழி அதனால் அதைச் சமூகக் கலை என்று சொல்ல வேண்டும்,

நாய்க்கு நான்கு கால்கள் இருப்பதைப்பார்த்து அகற்கு நாற்காலி என்றால் மற்றவர்கள் ஒத்துக் கொள்வார்களா? ஒரு காலும் ஒத்துக் கொள்ள மார்டார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துக் கொண்டால்தான் ஒரு பெயர் நிற்கும். "மரபு நிலை திரியின் பிரிது பிரிதாகும் "என்ற தொல்காப்பிய சூத்திரம் இங்கு ஒப்ப நோக்கி மகிழற்பாலதாகும். இப்படி மொழியில் ஒவ்வொரு சொல்லும் எல்லோரும் ஒத்துக்கொண்டால் தான் மொழியாக வாழ முடியும். இதனால் மொழி என்பது எவ்வளவு பெரிய சமூகக் கலை என்பது தெரிகிறது எந்த அரசாங்கத்தாலும் மாறாமல் மிகப் பழங்கால முதல் ஏற்பட்டு இன்றுவரை வளரும் கலை மொழிதான்.

## மூன்று ஒலிகள்

மனிதனுடைய பேச்சு நாகரீகமாக வளர்ந்து இருக்கிறது. உணர்ச்சி ஒலி, போலி ஒலி, குறிப்பு ஒலி என்ற மூன்று ஒலி வகை இருப்பதால்தான் மனிதனுடைய பேச்சு நன்றாகப் பண்பட்டு மொழி என்று பாராட்டப் பட்டுப்படுகிறது.

பழங்கால மனிதன் தன் உணர்ச்சியால் சில ஒலிகளை இயற்கையாகவே ஒலித்தான். இப்போதும் அப்படிப்பட்ட ஒலிகள் இருக்கின்றன. சிசீ. தூதூ. ஓஒ முதலான ஒலிகள் என்று சொல்லுவார்கள்.

நாம் குழந்தையிடம் பூனை என்று தெரிவிப்பதற்காக என்ன சொல்கிறோம்? பூனை, பூனை என்று அதன் பெயரைச் சொல்வதில்லை

மியா, மியா என்று கத்துவது போல ஒலிக்கிறோம். மியா என்று சொன்னவுடன் பூனை என்று குழந்தை தெரிந்து கொள்கிறது. இதனைபோலி ஒலிகள் என்று கூறலாம்.

கோழிக்கும் மற்ற பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணர்ச்சி ஒலி ஒன்றுதான் தெரியும். மனிதனுக்கு இன்னும் இரண்டு ஒலிகள் தெரியும், அதனால்தான் மனிதனுடைய பேச்சு நாகரீகமாக வளர்ந்திருக்கிறது. உணர்ச்சி ஒலி, போலி ஒலி, குறிப்பு ஒலி என்ற மூன்று வகையும் இருப்பதால் தான். மனிதனுடைய பேச்சு நன்றாகப் பண்பட்டு மொழி என்று பாராட்டப்படுகிறது.

மூன்றாவதாக உள்ளது குறிப்பு ஒலி. இந்த ஒலியால்பிறந்த சொற்களே மொழியில் மிகுதியாக உள்ளன. சலவைத் தொழிலாளி துணி வெளுத்துக்கொண்டு வரும்போது, துணிகளின் மூலையில் ஒருவகை அடையாளம் வைத்திருக்கிறான். ஒவ்வொரு வீட்டு துணிக்கும் ஒவ்வொரு அடையாளம் வைக்கிறான். அதுபோல் பழங்காலத்து மனிதன் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வோர் ஒலியை அடையாளமாக வைத்துள்ளான். பல பொருளுக்கும், பல தொழிலுக்கும், பல சொற்கள் ஏற்படுத்தி, மொழியை வளர்ப்பதற்கு காரணமாக இருந்தது மனிதனுடைய குரல்தான். இந்த மூன்றுவகையான ஒலிகளும் சேர்ந்துதான் மொழி ஏற்படத் தொடங்கியது. இதுதான் மொழியின் தொடக்கம்.

மொழியை கிளைமொழி, பொது மொழி, சிறப்பு மொழி என்று முப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். மேலும் மொழியினை சைகை மொழி, குரல் மொழி, போலி மொழி, உணர்ச்சி மொழி, பண்பு மொழி, தொழில் மொழி, எனவும் பிரிக்கலாம்.

தமிழ் மொழியில் மாற்றங்கள் மூவகைக் காரணங்களால் நிகழும். அவை யாவை யெனின் 1 இலக்கண கூறு மாற்றம் 2. சொற்பொருள் மாற்றம் 3. சொல் வடிவ மாற்றம் என டாக்டர் சி. இலக்குவனார் தாம் எழுதிய 'பழந்தமிழ்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

"கூட்டொலிகளைத் தனி தனியெழுத்துக்களாக மற்றைய மொழிகள் எண்ணுவது போலத் தமிழ், தாள், தலை தெரியாது எண்ணுவதில்லை" என்றும் "தமிழ் எழுத்துக்களின் அமைப்பைவிட எளியது நினைத்தற் கெட்டாதாயினும் அதுவே எல்லா மொழிகளுக்கும் பொதுவான அமைப்பாகும்" என அறிஞர் மாணிக்க நாயக்கர் கூறுகிறார்.

தமிழ்மிக அருமையான மொழி, இனிமையான மொழி என்பதோடல்லாமல் தமிழ் மொழி ஒரு அருமைக் கலை எனல் மிகையன்று. நம்முடைய தாய் மொழி நமக்குப் பரம்பரைச் சொத்தாக வந்திருக்கும் தனிச் சிறப்புடைய தலை என்றும் உணரவேண்டும். இவ்வளவு அருமையான செந்தமிழை •ற்ப தோடல்லாமல் அதற்கு தம்மாலான தொண்டினைச் செய்து வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல் தமிழர்தம் கடனாகும்.

★



மீனளத்துறையின் அதிகாரிகளும், சோத்தநாட்டு பாதுகாப்புநிதித் தொகையான ரூ. 11,739-ஐ முதல்வர் கலைஞரிடம் அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் வழங்குகிறார்.

# வெள்ளாடு

(இறைவன்)

வான்எழுந்த வெண்ணிலவைச் சார ளத்தின்
வழியாகப் பார்த்துக்கொண் டிருந்தேன்! நன்றாய்
தான்எழுந்த மார்பகத்தாள் என்ம னைவி
சற்றருகில் வந்தமர்ந்தாள்! பாலம் போன்று
கூன்விழுந்த புருவங்கள் வளைந்து காதல்
குறுகுறுப்பை ஏற்றிவர, மதிமயங்கி
தேன்விழுந்த இதழோரம் நான்விழுந்தேன்!
திசைதிரும்ப இயலாது திகைக்க லானேன்!

"சித்துக்கள் பலசெய்து இரவில் என்னைத்
திண்டாட வைக்கின்ற நீரோ இன்று
சித்தங்கள் தடுமாறி எதற்கு அத்தான்
திகைத்தபடி நிற்கின்றீர்" என்றாள்! "தேங்காய்
கொத்துக்கள் போலிருக்கும் அழகி னத்தின்
குறுகுறுப்பில் கதகதப்பில் முனிவன் கூட
சித்தங்கள் தடுமாறி திகைப்பான் என்றால்
சிறியவன்நான் திகைக்காமல் என்ன செய்ய?"

"தேவைக்கும் மேலாக சிறுத்தி ருக்கும்
சிற்றிடையைப் பெற்றவளே! இதழ்கள் என்னும்
கோவைக்கும் இருகும்ப கோணத்திற்கும்
குறுக்கினிலே நான்சிக்கிக் கொண்டேன்" என்றேன்!
நாவைக்கும் போதெல்லாம் தேன்கொடுக்கும்
நசுங்காத புதுமலரோ, "எழில்வி ருத்தப்
பாவைக்கும் பாவலரே! தேவ லம்ஒர்
பாவைக்கு நீர்அஞ்ச லாமா?" என்றாள்!

வேழத்தின் தந்தங்கள் இரண்டைக் கண்டு
விலங்கினங்கள் எல்லாமே அஞ்சும்! மார்பின்
ஆழத்தில் பதிந்திடும்உன் மார்ப கத்தால்
அய்யய்யோ என்நெஞ்சம் அஞ்சும்" என்றேன்!
"கோழையிலும் கோழையத்தான் நீங்கள் என்று
குறும்போடு அவள்சிரித்தாள்! "இருதொ டையை
வாழையிலும் செவ்வாழை இனமாய் பார்த்து
வளர்த்தெடுத்துக் கொண்டவளே! முல்லைப் பூவே!

"வீரத்தில் சிறந்தவர்கள் எல்லாம் பெண்ணின்
விழிவீச்சில் விழுந்திடுவர்! நானோ மார்பு
பாரத்தால் இடையொடிய நிற்கும் உந்தன்
படையெடுப்பால் விழுந்திட்டேன்! அதுபோ கட்டும்!
ஈரத்தில் விதைவிதைக்க லாமோ?" என்றேன்!
'ஏரோட்ட வேண்டாமா?" என்றாள்! அந்த
நேரத்தில் தோட்டத்தில் சத்தம் கேட்க
நெஞ்சுயர்த்தித் தோட்டத்தை எட்டிப் பார்த்தேன்!

"தோட்டத்தில் என்னத்தான்?" என்றாள்! நானும்
சுவைக்கின்ற செங்கரும்பே! பலாச்சு ளையே
தோட்டத்தில் ஆடு" என்றேன்! போங்க அத்தான்
தோட்டத்தில் ஆடுவதா? மக்கள் கூடும்
கூட்டத்தில் ஆடாமல் எவரே யேனும்
தோட்டத்தில் ஆடுவரா? நானும் என்ன
ஆட்டத்தில் மாதவிபோல் துள்ளி துள்ளி
ஆடுவதில் வல்லவளா? முடியா தென்றாள்!"

வீடுவந்து கோடையிலே எனக்கு மட்டும்
வீசுமிளங் காற்றான அவளைப் பார்த்து
"காடுதந்த மணமலரே! பொடித்து வைத்தக்
கற்கண்டின் சுவைத்தூளே! நம்தோட் டத்தில்
ஆடுவந்து மேய்ந்ததினால் ஆடு என்றேன்!
அன்றிஉனை எவர்ஆடச் சொன்னார்?" என்றேன்!
சூடுவந்து என்னுடலைத் தகிக்கும் போது
சுவைதந்து தணிப்பவளோ சிரித்துச் சொன்னாள்!

ஆடுகின்ற மயிலுண்டு! தென்றல் காற்றால்
ஆடுகின்ற மலருண்டு! துள்ளித் துள்ளி
ஆடுகின்ற அலையுண்டு! கோலெ டுத்து
ஆட்டுகின்ற குரங்காட்டி முன்னால் நின்று
ஆடுகின்ற குரங்குண்டு! இவற்றிற் கெல்லாம்
ஆடென்று பெயரில்லை! ஆனால் மண்ணில்
ஆடுகின்ற பழக்கமொன்று இல்லா ஆட்டை
ஆடென்று ஏன்அத்தான் சொன்னார்" என்றாள்!

சூதாட்டம் என்றாலும் உருட்டிப் போடும்
சொக்கட்டான் என்றாலும், அன்றி வேறு
யாதாட்டம் என்றாலும் பணய மாக
ஆட்டினைத்தான் வைப்பார்கள்! அக்கா லத்தில்
சூதாட்டம் ஆடுதற்கு ஆடு எல்லாம்
துணையாக இருந்ததினால், ஈக்கள் ஓட்டக்
காதாட்டும் ஆடுதனை ஆடு என்றார்!
கற்கண்டே புரிகிறதா?" என்றேன்! மேலும்,

"ஆடுண்டா உன்னிடத்தில்? இருந்தால் சூது
ஆடென்று சொல்கின்ற பழக்கம் பின்னால்
ஆடுதனை ஆடென்று அழைப்ப தற்கோர்
ஆதாரம் ஆயிற்று" என்றேன்! மார்புக்
கூடுதனைச் சேலையினால் மூடிக் காக்கும்
குளிர்நிலவோ "ஒர்ஐயம்" என்றாள்! "மேனி
ஏடுதனை நான்புரட்ட சம்ம தித்து
இடமளிக்கும் புத்தகமே என்ன?" என்றேன்!

"வெள்ளாடு என்கின்றோம்! எதற்கு அத்தான்
வெள்ளைநிற மில்லாத ஆட்டை மக்கள்
வெள்ளாடு என்கின்றார்?" என்றாள்! 'கண்ணே!
வேள்விசெய்யும் போதெல்லாம் மண்ணில் மக்கள்
வெள்ளாட்டைப் பலியிட்டார்! எனவே அஃதை
*வேள்விஆடு என்றிட்டார்! அதுவே பின்னால்
வெள்ளாடாய் ஆயிற்று" என்றேன்! எந்தன்
விளக்கத்தைக் கேட்டவளோ நெருங்கி வந்தாள்!

"புதுவிளக்கம் தந்திட்டீர்! பரிசாய் எந்தன்
புத்தமுதை உண்ணுங்கள்" என்றாள்! நானும்
மதுவிலக்கு நீங்கியதால் துணிந்து இங்கே
மதுகுடிக்கத் துவங்குகிறேன்! எங்கே கொஞ்சம்
இதுவிலக்கு என்றிட்டேன்! அவளும் செவ்வாய்
இதழ்விலக்கச் சம்மதித்தாள்! இடைமேல் காட்டி
அதுவிலக்கு என்றிட்டேன்! "ஊஹூம்" என்று
அன்னமவள் வெட்கத்தால் தலைகு னிந்தாள்!

---

* வேள்வி ஆடு - வேள் ஆடு - வேள்ளாடு - வெள்ளாடு.

# காவியக் கனல்

(புலவர் அரிமதி தென்னகன்)

## 3. ஏன் 'கனல்' எழுந்தது?

தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் உள்ளன; 'அம்மவோ' என்று வியப்புறுமளவிற்கு ஈசற் கூட்டமென எண்ணற்றப் புராணங்கள் உள்ளன. இவைகளுக்கிடையே இன்னுமொரு காப்பியமா? அதுவும் இராவணன் பெயரிலா? என்றெல்லாம் கேட்பவர்கள் இன்றைக்கே சாகாமல் இருக்கும்போது, இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் இப்படியொரு வினா எழுந்ததில் என்ன வியப்பிருக்க முடியும்!!

1948 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னையில் நடைபெற்ற கம்பர் மாநாட்டில், பி. ஸ்ரீ ஆச்சாரியா என்பவர், 'இராவண காவியம்' எதற்கு என்றொரு வினாவை எழுப்பி, ஒரு கண்டனச் சொற்பொழிவையும் செய்துள்ளார். அந்தச் சொற்பொழிவில் இராவணனை, ஆங்கிலப் பேரறிஞன் மில்டன் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' என்னும் கவிதையின் பாத்திரப் படைப்பான சைத்தானுக்கு ஒப்பாகவும் பேசித் தன் வயிற்றெறிச்சலின் அளவை வாயைத்திறந்து காட்டியுள்ளார். அத்தகைய இராமதாசர்களுக்குக் காவியப் புலவர் குழந்தையவர்கள் குடியரசு ஏட்டில் விடை கூறி, அவர்களின் விழியைப் பிதுங்கிடச் செய்துள்ளார். அந்த விடைகளை நாம் அறிந்து கொள்வது, இனிமேல் நம்மிடம் வம்புக்கு வரவிருக்கும் 'ஆச்சாரியார்'களுக்குப் பாடம் புகட்டும் படைக் கலனாக அமையும். நாடெங்கும் கம்பர் விழாக்கள் நடைபெற்று வரும் நிலையில், நடைபெற்ற இராவண காவியப் போராட்ட வரலாறுகளை அறிந்து கொள்வது, நடைபெறவிருக்கும் போராட்டத்திற்குத் துணையாக இருக்கும்.

'இராவண காவியம் எதற்காக?' என்னும் வினாவிற்கு விடை கூறப் புகுந்த குழந்தை அவர்கள் தமிழர்கள் சிந்திக்க மறந்த ஒரு உண்மையைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். "இராமனுக்கா விழாஎடுக்கிறோம்? கம்பனுக்குத்தானே விழா! கம்பன் ஒரு தமிழன் என்பதால் தமிழனுக்குத் தானே விழா!! கம்பன் விழாவில் கரை புரண்டு ஓடுவது தமிழ்ச் சுவைதானே!!" என்றெல்லாம் நம்மை ஏய்க்க நினைக்கும் எத்தர்களுக்குக் காவியப் புலவரின் விளக்கத்தைக் காணிக்கையாக்கிட வேண்டும்! பிறவிக் குருடர்களின் 'பேரன்'களான கம்பதாசர்களுக்கு நம் காணிக்கை கருத்துக் குருட்டை நீக்கும் மருந்தாக அமையாவிட்டாலும், இனிமேலாகிலும் இத்தகைய வெண்டைக்காய் விளக்கங்களையாவது சொல்லாமல் இருப்பார்கள் அல்லவா!!

சிலம்பதிகாரம் தந்த இளங்கோவடிகளுக்கும், குறள் நெறி கொடுத்த திருவள்ளுவருக்கும் விழாக்கள் இல்லை. ஆனால் இராமனைத் தெய்வமாக்கிய கம்பனுக்கு மட்டும் விழா!!

சிலம்பில் இல்லாத தமிழ்ச் சுவையா? குறளில் காணாது இலக்கியச் சுவையா? பின் எதற்காகக் கம்பனின் கவிதையில் மட்டும் சுவையைத் தேடுகிறார்கள்? எதற்காக இலக்கியச் சுவையைக் கம்பன் கவிதையில் உள்ளதாகத் தேடித் திரிகிறார்கள்? தமிழின் சுவையே கம்ப ராமாயணத்தில் மட்டுமே இருப்பதாக மக்களைக் கூட்டி ஏன் தம்பட்டம், அடிக்கிறார்கள்? குழந்தை கூறுகிறார்...!!

"அங்கேதான் இருக்கிறது நுட்பம்; அது ஒரு தந்திரம் என்றுங் கூடச் சொல்லலாம். அது ஒரு கூட்டத்தாரின் தன்னலமென்பதே பொருத்தமானதாகும். எங்ஙனம்? மேல் எடுத்துக் காட்டிய புலவர் பெருமக்களெல்லாரும் தமிழர் வாழ்வுக்காக தம் இனப் பெருமைக்காகத் தம் தமிழ்ப் புலமையைப் பயன்படுத்தினர். 'கம்பரோ தமிழர் வீழ்வுக்காக, தமிழினப் பகைவரான ஆரியர் வாழ்வுக்காகத் தம் புலமையினைத், தம் தமிழ்க் கவித் திறத்தினைப் பயன்படுத்தினார்; தமிழினத்தை ஆரியத்துக்கு, ஆரியர்க்கு அடிமையாக்கத் தமது தமிழ்க் கவித்திறத்தினைப் பயன்படுத்தினார்; அதற்குத் தம் தமிழ்க் கவித்திறத்தினைக் கருவியாகக் கொண்டனர் எனலாம்"

**இலக்கியம்**

எவ்வளவு சரியான மதிப்பீடு! எத்தகைய அருமையான ஆய்வுரை!! அசைக்க முடியாத அப்பட்டமான உண்மை!! தமிழ்க்கும், தமிழர்க்கும் பகையானவனெல்லாம் கம்பன் தமிழ்...கம்பன் தமிழ் என்று பொய்க்கால் குதிரையாட்டம் ஆடுகிறானே அதற்கு இதுதானே காரணம்!! கம்பன் விழா என்னும் பெயரால் 'இராம லீலா' நடத்துவதையும், கம்பன் கவிச்சுவை என்னும் பெயரால் இராமனைத் தெய்வமாக்குவதையும் கண்கூடாகக் காண்பவர்க்குத்தான் இந்த உண்மைகள் புலனாகும். இவற்றையெல்லாம் குழந்தையவர்கள் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

"தமிழர் மாபெருந் தலைவனான இராவணனை அரக்கர் தலைவன் ஆக்கினதும், மானமிக்க மறத் தமிழர்களை வானரங்கள்—குரங்குகள் ஆக்கினதும், தம் இனத்தைக் காட்டிக் கொடுத்த மானங்கெட்ட தமிழர்களை—ஆரிய அடிதாங்கிகளை ஆழ்வார்ப் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தினதும் ஆன இன்னோரன்ன போலிப் பொய்க் கூற்றுக்களைப் போக்குவதற்காகவே இராவண காவியம் செய்யப்பட்டதாகும்."

"தமிழர் பகைவராகிய வான்மீகி அங்ஙனம் இழித்துரைக்கினும், உண்மையுணர்ந்த தமிழ் மகனாகிய கம்பர் தம் முன்னோரை அங்ஙனமே அரக்கர் எனவும், குரங்குகள்எனவும் இழித்துரைத்த கயமைத்தனத்தைத் தமிழ் மக்கள் உணரவே இராவண காவியம் செய்யப்பட்டதாகும்."

"தமிழர் குலப் பகைவனான ஆரிய இராமனைப் போற்றிப் புகழ்வதோடமையாது, கோயில் கட்டிக் கும்பிட்டு வருவதுமான தமிழ் மக்களது அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்தவேயாகும்."

"தங்கள் பெருந் தலைவனையும், தலைவியையும் நாத்தழும்பேறப் பழித்துவரும் தமிழ் மக்களுக்கு உண்மையை உணர்த்தி இனவுணர்ச்சியுண்டாக்கி, அத்தமிழர் தலைவர்கள்மீது வேண்டுமென்றே சுமத்தப்பட்டுள்ள அடாப் பெரும் பழியைத் துடைப்பதற்கேயாகும்."

"இராவணன் அரக்கன் அல்லன்; தமிழர் தலைவன்; தன்மானமுடையவன்; தமிழர்க்காகத் தமிழர் வாழ்வுக்காகத் தனிக்களத்தொருவனாய் உயிர்விட்ட தகைமிகு செம்மல்; அன்னான் தங்கையாகிய காமவல்லி (சூர்ப்பநகை) தாபத நோன்பு நோற்றிருந்த (கைம்மை) தகைமிகு தமிழ் மகள் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து தம் தவற்றைத் தப்பெண்ணத்தைத் திருத்திக் கொள்வதற்கேயாகும்."

"ஆண்மகன் ஒருவன் மீது ஒரு பெண் மகள் காதல் கொள்வது மூக்கு, முலையறுக்கக்கூடிய அவ்வளவு பெரிய குற்றமா? என்னும் ஆராய்ச்சியறிவைத் தமிழ்மக்கட்குண்டாக்கி, காமவல்லியை (சூர்ப்பநகையை) உருக்குலைத்துக் கொன்ற இராமன் செயல் கொடிதினும் கொடிய அறக்கொடுஞ்செயல் என நல்ல தீர்ப்புக் கூறவேயாகும்."

"தமிழ் மூதாட்டியைத் (தாடகையை) தூற்றித் திரியும் தமிழர்களின் மயக்கவுணர்வினைப் போக்கி, உண்மையை உணரும்படிச் செய்யவேயாகும்."

"பெண்கொலைக்கஞ்சா இராமன் அறக்கொடியோன் என்பதைத் தமிழ் மக்கள் உணரும்படிச் செய்வதற்கேயாகும்."

இவ்வாறு "இராவண காவியம் எதற்காக?" என்னும் வினாவிற்கு விடைதந்த காவியப் புலவர் குழந்தையவர்கள் கண்டதே காட்சியெனக் கண்மூடிக்கிடக்கும் தமிழர்களுக்கு சில உண்மைகளை எடுத்துக் காட்டி எச்சரித்துள்ளார்கள்.

ஆரிய நங்கை 'சவரி' தமிழ்ப் பெண் எனும் போர்வையில் நடமாடிய ஐந்தாம் படையாவாள்; வாலி, சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்துகொண்டு அவனை ஊரைவிட்டு ஓட்டிவிட்டான் என்பது வாலிமேல் சுமத்தப் பெற்ற அடாப்பழியேயாகும்; தமிழரை ஆரியர்க்குக் காட்டிக் கொடுத்த அற்பனே அனுமனாகும்; தமிழர்களை ஆரிய இராமனுக்குக் காட்டிக் கொடுத்தவரெல்லாம் ஆழ்வார்கள் ஆக்கப்பட்டனர்; சிரஞ்சீவிகளாகச் சிறப்பிக்கப்பட்டனர் என்றெல்லாம் மறைக்கப்பட்ட, கம்பனால் பூசி மெழுகப்பட்ட உண்மைகளையெல்லாம் "இராவண காவியம் எதற்காக?" என்று வினா தொடுத்தோர்க்கு விடைகளாகத் தருகிறார் குழந்தையவர்கள்.

மேலும் ஓர் உண்மையைத் தமிழரின் உணர்வைத் தட்டியெழுப்பும் வகையில் தெளிவுபடுத்துகிறார் குழந்தைப் புலவர். ஆரிய எதிர்ப்பினர் என்பதாலேயே இராவணன் முதலானோர் அரக்கர்கள் எனப் பழிக்கப்பட்டனர் என்பதைச் சுட்டிக் காட்டி, வான்மீகி எந்த அளவிற்கு வஞ்ச நெஞ்சத்தினனாராய் நடந்துகொண்டார். என்பதை அவர் சூட்டியுள்ள பெயர்களைக் கொண்டே தெளிவாக்குகிறார்.

சூர்ப்பநகை என்றால் முறம் போன்ற பல்லையுடையவள் என்று பொருளாம். அதாவது முறப் பல்லியாம்!! மண்டோதரி என்றால் பெரிய வயிற்றைக் கொண்டவள் என்று பொருளாம்; அதாவது பெருவயிறுயாம்!! கும்பகர்ணன் என்றால் குடம் போன்ற காதுகளைக் கொண்டவன் என்று பொருளாம்; அதாவது குடக் காதனாம்!!

எப்படி வேடிக்கை!! நேரு அவர்கள் தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய மடலில் "இராமாயணப் போர் ஆரிய திராவிடப் போரேயாகும். தென்னாட்டில் வாழ்ந்த திராவிடர்களைத் தாம் 'குரங்குகள்' என்றனர்" என்று குறிப்பிட்டு எழுதியுள்ளதை நினைத்துப் பார்த்து வால்மீகியின் வன்நெஞ்சில் அடைத்துக் கொண்டிருந்த அருவெறுப்பை அளந்து பார்க்கவேண்டும். தென்னாட்டு அரச மரபினர்க்கு முறப் பல்லி, பெருவயிறி, குடக் காதன் என்று பெயரிட்டு அழைக்குமளவுக்குத் திராவிடர் எதிர்ப்புணர்ச்சி வால்மிகிக்கு இருக்கும்போது. இந்த கம்பன் என்ன செய்திருக்க வேண்டும்!! எதை யெதையோ மாற்றிக் காவியம் செய்த கம்பனுக்கு இப்பெயர்களை மட்டும் ஏன் மாற்றத் தெரியவில்லை? மயக்கம்...மயக்கம்!!

இவ்வாறெல்லாம், மூடி மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக் கொணர வேண்டும் எனும் பெரு நோக்கத்தோடுதான் புலவர்—குழந்தையவர்கள் ஒரு புரட்சிக் காவியத்தை உருவாக்கினார். காவியம் என்னும் பெயரில் குழந்தையவர் மூட்டிய கனல் பட்டு கம்பராமாயணப் பக்தர்களின் மூக்கு கருகத் தொடங்கியது; உடம்பு எரியத் தொடங்கியது; கனலின் அனலால் அவர்களின் கண்கள் திறக்க மறுத்தன. எனவேதான் கனலை அணைக்கத் துடித்தனர்; கூப்பாடு போட்டனர்; கொடுமை என்றனர்; கூட்டம் போட்டுக் குதித்துக் காட்டினர். மதம் போயிற்று; மானம் போயிற்று என்றெல்லாம் மார் தட்டினர்; இராமனுக்கா இழிவு? தெய்வ நிந்தனை...அய்யோ நாத்தீசும் ... நாத்திகம் என்று அலறித் துடித்தனர். எனவே தடை வந்தது!!

தெரு விளக்குகள் அணைக்கப்பட்டால் திருடர்களுக்கு மகிழ்ச்சிதானே! காவியத் தடை கம்பதாசர்களுக்குக் களிப்பைக் கொடுத்தது!!

இருபத்துமூன்று ஆண்டுகள் இராவண காவியம் சிறையுள் பூட்டப்படாமல் இருந்திருக்குமேயானால் இராமனையும் சீதையையும் தேடிப்பிடிக்க எந்த அனுமனாலேயும் முடிந்திருக்காது. கம்பர் விழாக்கள் கல்லறைக்குள் போயிருக்கும்!! இராம லீலாக்களுக்கு எப்போதோ முடிவேற்பட்டிருக்கும்.

குருதிச் சூட்டைக் கொலையால் அணைக்கலாம்; ஆனால், கொள்கைச் சூட்டை அணைத்திட எந்தக் கொம்பனாலும் முடியாது என்பதை இராவண காவியம் உறுதிப்படுத்தியது!!

காட்டு விறகின் கனலை ஒரு குவளைத் தண்ணீரால் அணைத்துச் சாம்பலாக்கிக் காட்டலாம்; ஆனால் கருத்துக் கனலை அணைக்க எத்தனைக் காரைக்குடிகளாலும் முடியாது என்பதை குழந்தைப் புலவரின் காவியக் கனல் நிலைநாட்டியது!!

இராமனைத் தெய்வமாக்கி, இராவணனை அரக்கனாக்க எத்தனை விழாக்கள் கொண்டாடினாலும், 1935-இல் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தொடங்கிவைத்த பணியை, 1936-இல் குழந்தையவர்கள் இராவண காவிய வழி தொடரவைத்தபணியைத் தடுத்த நிறுத்த எவராலும் முடியாது.

1935-ஆம் ஆண்டு 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தைப் படைத்த பாவேந்தர் அவர்கள் புதுவை முரசு' எனும் ஏட்டில்,

"தென்திசையைப் பார்க்கின்
றேன்;
என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்க
ளெலாம் பூரிக்கு தடடா!
அன்றந்த இலங்கையினை
ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும்
தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோ
ளான்
கொடைகொடுக்கும்கையான்
குள்ளநரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம்
என்றமிழர் மூதாதை,
என்றமிழர் பெருமான்
இராவணன்காண்! அவன்நாமம்
இவ்வுலகம் அறியும்"

என்று முழக்கமிட்டார். "...... இராவணன்தன் கீர்த்தி சொல்லி அவன் நாமம் வாழ்த்த வேண்டும்" என்று ஆணையிட்டார். பாவேந்தரின் எண்ணம் இராவண காவியமாக மலர்ந்து மணம் பரப்பியது. அம்மணத்தை நுகர்ந்த பாவேந்தர் அவர்கள்,

"இராவண காவியம் எனும்
இது தமிழகத்து
இராஇடம் இலையெனத்
திராவிடர் புரிக!
ஆக்கியோன் குழந்தையும்,
போக்கறு பனுவலும்
ஆழிசூழ் உலகில் என்றும்
வாழிய நன்றே! வாழிய
நன்றே!!"

—என இராவண காவியத்திற்கு அளித்த சிறப்புப் பாயிரத்தில் சிந்தை குளிர வாழ்த்தியுள்ளார்.

இவ்வாறு பாவேந்தரால் பாராட்டப் பெற்று, 'இராவண காவியம் திராவிடத்தில் இல்லாத இடமே இருக்கக்கூடாது; ஒவ்வொரு வீட்டிலும் இராவண காவியம் ஒளிவீசும் திருவிளக்காய் இடம் பெற வேண்டும்' என்றும் வாழ்த்தப் பெற்ற இராவண காவியம் தமிழகத்தில் திட்டமிட்டுப் பரப்பப்படுமேயானுல் எத்தகைய நிலை உருவாகும் என்பதற்கு இரண்டு ஆதாரங்களை ஈங்கு குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

இராமாயணத்தைத் தீயில் இட வேண்டும் என்று அறிஞர் அண்ணு அவர்கள் நாடெங்கும் புரட்சிக் கனலை உருவாக்கியபோது எந்த ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள் அண்ணு அவர்களிடம் வாதுக்கு வந்தாரோ அதே சேதுப்பிள்ளை யவர்கள் இராவண காவியத்தைப் பாராட்டியுள்ளார்கள். கம்பரையும், காகுத்தனையும் தன்னுடைய உயிராக, உணர்வாகக் கொண்ட சொல்லின் செல்வர் திரு. ரா. பி.- சேதுப்பிள்ளையவர்கள் தன்னை மறந்து ஓர் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

"நான் கம்பராமாயணக்
கவிச் சுவையில்
கட்டுண்டு கிடந்தனன்; தங்கள்
இராவண காவியம்

அக்கட்டை அவிழ்த்துவிட்டது" என்று அணுவளவும் மறைவின்றி தன் அகத்துள் ஏற்பட்ட மாறுதலைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

கம்பராமாயணம் என் கருத்தைக் கட்டி இருந்தது; அக்கம்பராமாயணக் கட்டை இராவண காவியம் அவிழ்த்து விட்டது என்று சேதுப் பிள்ளையே தன் மனமாற்றத்தைக் கூறியுள்ளார் என்ருல் இராவண காவியம் எத்தகைய ஆற்றலைப் பெற்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

குழந்தையின் காவியக் கனல், சேதுப் பிள்ளையின் 'கம்பக் காதல் மலையை'யே கரைத்து விட்டது என்ருல் உதிர்ந்து கிடக்கும் சருகுகளின் நிலை என்ன ஆகும்!!

அம்மியே காற்றில் பறக்கும் போது, வேரறுபட்ட அருகம் புல்லா அசையாமல் இருக்கும்!!

எதிர்காலத்தில் பகுத்தறிவு மன்றங்களும், சிந்தனையாளர் கழகங்களும் இராவண காவிய மாநாடுகளையும், கருத்தரங்குகளையும், விழாக்களையும் நடத்தும்போது 'இருட்டு மலைகள்' என்னுவாகும் என்பதற்கு ரா. பி. சேதுப் பிள்ளையவர்களின் பாராட்டு ஒன்றே போதிய சான்ருகும்.

சேதுப்பிள்ளை யவர்கள் இராவண காவியச் சிறப்பைப் புகழ்ந்தார். இன்னுமொரு கம்பராமாயண அன்பரோ புலவர்-குழந்தை அவர்களைப் போற்றியுள்ளார்கள்.

கம்பராமாயண அன்பர் திரு. புலவர் - ஐயன்பெருமாள் கோனுர் அவர்கள் தன் ஏக்கத்தைத் தீர்த்தவர் குழந்தை என்கிருர்.

"இனிஒரு கம்பனும் வருவானே?
இப்படியும் கவி தருவானே?"

—என்று ஏங்கிக் கிடந்த ஐயன் பெருமாள் கோனுர் அவர்கள் இராவண காவியத்தைக் கண்டார். அவ்வளவுதான்! அவர் கனவு காட்சியாகியது; அவர் சிந்தனை செயலாகியது; எப்படி...?

"கம்பனே வந்தான்
அப்படிக் கவிதையும் தந்தான்"

—என்று பாடல் திறத்தால் காவியப் புலவரை அவர் கம்பராகவே ஏற்றுக்கொள்ளுகிருர் கம்பரின் அன்பருக்கு, கருத்து மாறுபாடுகளையும் மிஞ்சி, குழந்தையவக்கள் கம்பராகத் தெரிகிருர் என்ருல் கம்பனின் கவிதைக்கு எந்தவகையிலும் குழந்தையின் கவிதை குறைந்ததல்ல என்று தானே பொருள்.

விருத்தத்தில் புலி, கவிதை ஊற்று, கற்பனைக் கடல் கம்பனுக்கு முன்னே இந்தக் குழந்தை எம்மாத்திரம் என்று இறுமாப்புடன் பேசித் திரியும் அரைகுறைகளுக்கு ஐயன்பெருமாள் கோனுரின் விளக்கமே போதுமெனக் கருதுகிறேம்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புகள் பலவற்றைக் கொண்டு வீரவுலா வந்துகொண்டிருக்கும் இராவண காவியம் 3100 பாடல்களைக் கொண்டதாகும். தடைக்கு முன் 2828 செய்யுட்களைக் கொண்டிருந்த காவியம், தடைக்குப் பின் 272 புதிய செய்யுட்களோடு பொலிவாக வெளிவந்துள்ளது.

3100 செய்யுட்களைக் கொண்ட இராவண காவியம் 1. தமிழகக் காண்டம், 2. இலங்கைக் காண்டம், 3. விந்தக் காண்டம், 4. பழிபுரி காண்டம், 5. போர்க் காண்டம் என ஐந்து காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காண்டங்களும் பல படலங்களாக வகுக்கப்பட்டுள்ளன. காண்டங்களைக் காவியத்தின் பெரிய பிரிவுகள் என்றும், படலங்களைக் காண்டங்களின் உட்பிரிவுகள் என்றும் கொள்ள வேண்டும்.

தேவையான இவைகளைத் தெரிந்து கொண்டபின் இனி காவியத்தைத் தொடலாம், பின் தொடரலாம்!!

(தொடரும்)

[illegible] சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-1
[illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.


புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர் வழங்கும்
ஜெயந்தியின்
ராமன்
தேடிய
சீதை
தயாரிப்பு
N. கனகசபை
டைரக்ஷன்
ப. நீலகண்டன்
கலர் ஜெமினி
சென்னை
மிட்லண்ட்
ஏர்கண்டிஷன்